# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.07.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். NC 3078/F/2022 in SA 15172/F/2021**

திரு.M.லட்சுமணன், மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
குமாராட்சி-608 302,
கடலூர் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

ஆணையத்தால் 23.09.2022 அன்று SA 15172/F/2021 வழக்கில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

> **“மேல்முறையீட்டாளர் 12.01.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவில் கோரிய தகவல்களுக்கு விரிவான அறிக்கையினை உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரக் காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன்கூடிய பதிவஞ்சல் வாயிலாக**

**சட்டப்பிரிவு 7(6)-ன் படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு அனுப்பிவைத்து மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினையும் மேல்முறையீட்டாளர் தகவல்களை பெற்றுக்கொண்டதனை உறுதிப்படுத்தி, ஆணையத்திற்கு தெரியப்படுத்துமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகிறது".**

2. மேற்சொன்ன ஆணை நிறைவேற்றப்படவில்லையென்று தெரிவித்து, மனுதாரர் 19.12.2022 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய ஆணை நிறைவேற்றாமை மனு ஆணையத்தால் பெறப்பட்டு NC 3078/F/2022 ஆக பதிவு செய்யப்பட்டு, மேற்சொன்ன ஆணை நிறைவேற்றாமை மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு, 01/07/2025 அன்று ஆணையத்தின் நேரடி விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. இன்றைய (01.07.2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.P.V.விஜய், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்), குமாராட்சி, கடலூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணையின் போது ஆணையத்தின் மேற்சொன்ன 23.09.2022 தேதியிட்ட ஆணை நிறைவேற்றப்படாதது குறித்து, பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரணை செய்தபோது, மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியது குறித்து எந்த ஆவணங்களையும், ஆதாரங்களையும் சமர்ப்பிக்கவில்லை.

5. மனுதாரர் தனது சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவில் கோரிய தகவல்கள், இதுநாள் வரை பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு வழங்கப்படவில்லை என்று ஆணையத்தின் முன் தெரிவித்தார்.

6. மேலும் இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களை விசாரணையின்போது ஆணையத்தால் பரிசீலனை செய்கையில், ஆணையம் உத்தரவிட்ட பின்னரும், பொது அதிகார அமைப்பால் மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. இந்நிலையில், ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கிறது.

- **ஆணையத்தால் 23.09.2022 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை இது நாள் வரை நிறைவேற்றாத காரணத்திற்காக தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.25,000/-ஐ**

**(இருபத்தைந்தாயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பானது இழப்பீடாக மனுதாரருக்கு 15 தினங்களுக்குள் வழங்க ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும், மனுதாரர் இழப்பீட்டு தொகையினை பெற்றுக்கொண்டதற்கான ரசீதையும், இணைத்து பொதுத் தகவல் அலுவலர் 24.07.2025 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

- **மேலும், 23.09.2022 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவினை மதிக்காமலும், செயல்படுத்தாமலும் இருந்ததற்காக அப்போதைய துணை வட்டார வளர்ச்சி அலுவலர், திரு.N.தங்கவேல், அவர்கள் மீது ஏன் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மூலம் அனுப்ப உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மேற்சொன்ன பொதுத் தகவல் அலுவலரிடம் விளக்கத்தினை பெற்று 24.07.2025 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். NC 3078/F/2022 in SA 15172/F/2021</u>**

<u>பெறுநர்</u>

பொது தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
குமாராட்சி-608 302,
கடலூர் மாவட்டம்.

**அப்போதைய (23.09.2022 தேதிய)**
**திரு.N.தங்கவேல்,**
**பொதுத் தகவல் அலுவலர்/**
**துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,**
**வட்டார வளர்ச்சி அலுவலகம்,**
**குமாராட்சி,**
**கடலூர் மாவட்டம்.**

**<u>மனுதாரர்:-</u>**

திரு.M.லட்சுமணன்,
வடக்கு தெரு, கீழக்கரை,
கோட்பாடி குமராட்சி அஞ்சல்,
காட்டுமன்னார்கோயில் வட்டம்,
கடலூர் மாவட்டம்- 608 302.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.

Copy to: File NS/PA-